**<u>சார்பு நீதிமன்றம், துறையூர்.</u>**

**முன்னிலை .. திரு. C.விஜய் கார்த்திக், M.A,M.L.,**

**சார்பு நீதிபதி,**

**துறையூர்.**

**2026-ம் ஆண்டு ஜூலை மாதம் 02-ம் நாள் வியாழக்கிழமை**

**<u>அசல் வழக்கு எண்.39/2026</u>**

**<u>CNRNo.TNTP150001902026</u>**

**திருச்சி மாவட்டம், துறையூர் வட்டம், துறையூரில் இயங்கி வரும் கனரா வங்கி துறையூர் கிளையின் சார்பாக அதன் முதன்மை மேலாளர்.** ...வாதி.

/எதிர்/

**1.** திருச்சிராப்பள்ளி மாவட்டம், துறையூர் வட்டம், T.ரெங்கநாதபுரம் அஞ்சல், வடக்குத்தெரு, நெ.1/85 என்ற முகவரியில் வசிக்கும் முருகேசன் அவர்களின் மகன் சுமார் 31 வயதுள்ள M.சரத்குமார்.

**2.** திருச்சிராப்பள்ளி மாவட்டம், துறையூர் வட்டம், T.ரெங்கநாதபுரம் அஞ்சல், வடக்குத்தெரு, நெ.1/85 என்ற முகவரியில் வசிக்கும் பிச்சைமுத்து அவர்களின் மகன் சுமார் 65 வயதுள்ள P.முருகேசன்.

...பிரதிவாதிகள்.

வாதி வங்கியிடமிருந்து பிரதிவாதிகள் பெற்றுக்கொண்ட தொகை ரூ.2,02,300/-க்கு தற்போதைய தாவா தொகை ரூ.3,37,600.69/-ம், அதற்கு 11.70% வட்டியும், 2% அபராத வட்டியும், பின்வட்டியும், வாதிக்கு பிரதிவாதிகளிடமிருந்து கிடைக்க ஏதுவாக தீர்ப்பாணை வழங்க வழிவகை செய்ய வேண்டியும், மற்றும் செலவுத்தொகை கோரியும், உரிமையியல் விசாரணை நடைமுறைச்சட்டம் கட்டளை 7 விதி 1-ன் கீழ் வாதியால் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

வழக்கு 06.04.2026-ம் தேதி தாக்கல் செய்யப்பட்டு 07.04.2026 அன்று கோப்பிற்கு எடுக்கப்பட்டுள்ளது. தாவா மதிப்பு ரூ.3,37,600/- இதற்கு தமிழ்நாடு நீதிமன்ற கட்டணச்சட்டம் 14/1955 பிரிவு 22-ன் கீழ் செலுத்தப்பட்ட நீதிமன்ற கட்டணம் ரூ.10,130/- ஆகும்.

**<u>வழக்குமூலம் ..</u>** 28.07.2014, 18.07.2017, 14.12.2018, 07.11.2021, 18.10.2024 ஆகிய தேதிகளில் திருச்சிராப்பள்ளி மாவட்டம், துறையூர் வட்டம், துறையூர் டவுனில் உற்பத்தியாகியுள்ளது.

இந்த வழக்கானது இறுதியாக 23.06.2026-ம் தேதி விசாரணைக்கு வந்தபோது, வாதிக்காக வழக்கறிஞர் திரு.A.நாகராஜன் அவர்கள் ஆஜராகியும், பிரதிவாதிகளை அழைத்தும் ஆஜராகாததால் தோன்றாதரப்பினர்களாக கருதி வாதி தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்களை பரிசீலனை செய்தும், வாதி தரப்பில் நிகழ்த்திய வாதங்களை கேட்டும், இதுநாள்வரை இம்மன்ற பரிசீலனையில் இருந்து வந்து இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்...

**<u>தீர்ப்பாணை</u>**

**1.** வழக்கு செலவுத்தொகையுடன் அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.

**2.** வாதி வங்கிக்கு பிரதிவாதிகள் வழக்குரை தொகை ரூ.3,37,600/-ம், அசல் தொகை ரூ.2,02,300/-க்கு வழக்கு தாக்கல் செய்த தேதியிலிருந்து தீர்ப்பாணை தேதி வரை 9% வட்டியும், தீர்ப்பாணை தேதியிலிருந்து தொகை பைசலாகும் தேதி வரை 6% பின்வட்டியும் செலுத்த வேண்டுமென்று தீர்ப்பாணை பிறப்பிக்கப்படுகிறது.

**3.** வாதி வங்கிக்கு பிரதிவாதிகள் வழக்கு செலவுத்தொகையாக ரூ.14,140/-ஐ செலுத்த வேண்டுமென்று உத்தரவிடப்படுகிறது.

**<u>செலவுத்தொகை பட்டியல்</u>**

| வ.எண். | விவரம் | வாதி தரப்பு | | பிரதிவாதி தரப்பு | |
|---|---|---|---|---|---|
| 1. | பிராதுக்கு நீதிமன்ற கட்டணம் | 10,130 | .00 | -- | -- |
| 2. | வக்காலத்து | 10 | .00 | -- | -- |
| 3. | கட்டளை சேர்ப்பிக்க மற்றும் தயாரிக்க | 50 | .00 | -- | -- |
| 4. | ஆவணங்கள் | 00 | .00 | -- | -- |
| 5. | வழக்கறிஞர் கட்டணம் சீனியர் | 2,963 | .00 | -- | -- |
| 6. | வழக்கறிஞர் கட்டணம் ஜீனியர் | 987 | .00 | -- | -- |
| **மொத்தம்** | | 14,140 | .00 | -- | -- |

2026-ம் ஆண்டு ஜூலை திங்கள் 02-ம் நாள் இந்நீதிமன்ற முத்திரையும் கையொப்பமிட்டு கொடுக்கப்பட்டது.

(ஒம்)/-C.விஜய் கார்த்திக்,
சார்பு நீதிபதி,
துறையூர்.